
## பசு குண்டர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும்!

பாரதிய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில், பசுப் பாதுகாப்பு என்கிற பெயரில், அப்பாவி மக்களை அடித்துக் கொல்வது தொடர்கதையாக நடந்து வருகின்றன. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், ஹரியானா ஆகிய மாநிலங்களில் ஆளும் பா.ஜ.க. அரசின் ஆதரவுடன், பசுப் பாதுகாவலர்கள் என்கிற பெயரில், திரளும் குண்டர்கள், கால்நடைகளை ஏற்றிவரும் வாகனங்களை மறித்து, வழிப்பறி செய்வதையும், வாகனங்களில் உள்ளவர்களைக் கொடூரமாகத் தாக்கிக் கொலை செய்வதையும், அம்மாநில அரசுகள் வேடிக்கை பார்த்து வருகின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன், ராஜஸ்தானுக்கு எலுமிச்சைப் பழங்களை ஏற்றிவந்த லாரியை வழிமறித்த பசு குண்டர்கள், வாகனத்தில் பசுமாடுகளை ஏற்றி வந்ததாக, அந்த வாகனத்தில் வந்த ஹரியானாவைச் சேர்ந்த சோனு, சுந்தர் என்கிற இரண்டு இளைஞர்களைக் கொடூரமாகத் தாக்கி, வீடியோ எடுத்துள்ளனர். பசு குண்டர்களின் தாக்குதலில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியான நிலையில், அம்மாநில அரசுகளின் நடவடிக்கைகளும் வெறும் கண் துடைப்பாகவே உள்ளன. பசுப் பாதுகாப்பு என்கிற பெயரில் தலித்துகள், இஸ்லாமியர்களைத் தாக்குவதை வாடிக்கையாக வைத்துள்ள குற்றவாளிகளுக்கு ஆளும் பா.ஜ.க. ஆட்சியாளர்களே பாதுகாப்பாகவும் உள்ளனர்.

மாட்டிறைச்சி ஏற்றுமதியில் உலகின் முன்னணி நாடாக இந்தியா உள்ளதுடன், மாட்டிறைச்சி ஏற்றுமதி நிறுவனங்களை இந்துக்களும் நடத்தி வருகின்றனர். அதிலும் குறிப்பாக, ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட பார்ப்பனர்கள்கூட இறைச்சி ஏற்றுமதி நிறுவனங்களை நடத்தி வருகின்றனர் என்கின்றன தகவல்கள். ஆனால், கால்நடைகளை ஏற்றிவரும் அப்பாவித் தொழிலாளிகளை அடித்துக் கொல்வதை வேடிக்கை பார்க்கின்றன பா.ஜ.க. அரசுகள். மதம் என்பது தனிப்பட்ட விஷயம், அதனை தொழிலில், உணவில் புகுத்தி அரசியல் ஆதாயம் தேடும் பா.ஜ.க வினருக்கு மக்கள் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

## :.ப்ளாஷ்பேக்





சிவகுமார்

### கலைஞர் கைகளால் விருது!

1973-ஆம் ஆண்டு, மே மாதம் 29-ஆம் நாள் (செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணிக்கு, சென்னை, ஏவி.எம்.ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில், கே.பாலசந்தர் அவர்களின் இயக்கத்தில் வெளிவந்த ‘அரங்கேற்றம்’ படத்தின் 100-வது நாள் விழா, முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி தலைமையில் கொண்டாடப்பட்டது. இதில் இயக்குனர் கே.பாலசந்தர் சுமார் 20 நிமிடம் பேசினார். அந்த விழாவில், எனக்கு விருது வழங்கப்பட்ட போது எடுத்த புகைப்படம் இது. கே.பாலச்சந்தருக்கு மிகப்பெரிய திருப்பு முனையை ஏற்படுத்திய படம். இடையில் சிறிது தொய்வு ஏற்பட்டிருந்த நிலையிலிருந்து அவர் மீண்டும் மிக வேகமாகத் தொடர்ந்து இயங்க காரணமாக இருந்த படம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைகளால் விருது பெற்றதில் எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி. இந்தப் படத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம், எண்ண அலைகள் பின்னோக்கிச் செல்கின்றன.

– நடிகர் சிவகுமார், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### ஆந்திராவுக்குச் சென்ற திருத்தணி!

1953-ஆம் ஆண்டு, அக்டோபர் 1 -ஆம் தேதி, ஆந்திரப் பிரிவினைக்கான நாள் என முடிவு செய்யப்பட்டு எல்லைப் பிரிப்புப் பணிகள் நடைபெற்றன. வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தமிழ் பேசும் பகுதிகளை ஆந்திராவுடன் இணைக்கக் கூடாது என்று போராட்டம் நடைபெற்றது. திருத்தணி, அப்போது சித்தூர் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. போராட்டத்தை முன்னின்று, நடத்திய தமிழரசு கழகத்துடன் இணைந்து, தி.மு.கழகம் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியது.


## சீரணி → இளைஞர் அணி

18

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...**

ஓவியம் : ரவி பேலட்




ஒருவர் ஒரு புதிய விஷயத்தை முன்னெடுப்பார். அதன் மூலம் சில முன்னேற்றங்கள் நடக்கும். அவர் காலத்துக்குப் பிறகு, அந்த விஷயத்தை இன்னும் சிறப்பாகச் சீர்படுத்தி, இன்னொருவர் புதிய அடையாளத்தை வழங்குவார். அதன் மூலம் மேலும் பல சாதனைகள் செய்யப்படும். ஆனால், அந்தச் சாதனைகளையும் முதலாமவர் பெயரிலேயே எழுதிவிடுவார்கள் சிலர். சீரணி அரங்கத்துக்கும் அதுதான் நடந்தது!

2003-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 வரையில், சென்னை மெரினா கடற்கரையில் ‘சீரணி அரங்கம்’ என்ற ஒரு கட்டடம் இருந்தது. சென்னைக்கு மெரினா அடையாளமாக இருந்தது என்றால், மெரினாவுக்கு அடையாளமாக அந்த அரங்கம் இருந்தது. அதுதான் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழ்நாட்டு அரசியலில் பல புதிய திருப்பங்களுக்குச் சாட்சியாக நின்றது. ஆகஸ்ட் 9 இரவு 11 மணிக்கு அந்த அரங்கம், அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, அன்றைய அ.தி.மு.க. அரசால் இடிக்கப்பட்டது.

அப்போது முதல் இன்று வரையிலும், அந்தக் கட்டடத்தைப் பற்றி எழுதுபவர்கள், பேசுபவர்கள் எல்லோருமே **‘சீரணி அரங்கம்’** அண்ணா காலத்தில் கட்டப்பட்டது’ என்ற தவறான தகவலைப் பரப்பி வருகிறார்கள். உண்மையில், அந்த அரங்கம் முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் கட்டப்பட்டது. அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்களின் ஆட்சியில் சீரணித் தொண்டர்களால் எழுப்பப்பட்ட அந்தக் கட்டடத்தை கலைஞர் அவர்கள் 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று திறந்து வைத்தார்.

சென்னை மாவட்ட சீரணியினரால் கடற்கரையில் கட்டப்பட்ட சீரணி அரங்கத் திறப்பு விழா உள்ளாட்சி அமைச்சர் முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட சீரணித் தலைவர் நீல.நாராயணன் வரவேற்புரையாற்றினார். அந்த விழாவில், சீரணி அரங்கப் பொருட் செலவுக்காக ரூ.25 ஆயிரத்துக்கான காசோலையை ராஜஸ்தானியர் சங்கத்தின் சார்பில், சங்கத் தலைவர் ஷா அவர்கள், கலைஞரிடம் வழங்கினார்கள். அப்போது அமைச்சர் முத்துசாமி பேசியதாவது:

“சீரணி மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான சீரணித் தொண்டர்கள் லட்சக்கணக்கான மதிப்புள்ள சேவைகள் செய்திருக்கின்றனர். அதற்குச் சிகரம் வைத்ததுபோல் அண்ணா பிறந்த நாள் விழா நடைபெறவிருக்கும் நாளுக்கு முன்னோடியாக இந்த விழா நடைபெறுகிறது.

**இது எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமானதல்ல. எல்லா கட்சிகளுக்கும் பொதுவானது. அவரவர்கள் கூட்டம் நடத்தும்போது, தங்கள் கட்சிக் கொடியை, தலைவர் படங்களை மாட்டிக் கொள்ளலாம்.**

இது எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமானதல்ல. எல்லா கட்சிகளுக்கும் பொதுவானது. அவரவர்கள் கூட்டம் நடத்தும்போது, தங்கள் கட்சிக் கொடியை, தலைவர் படங்களை மாட்டிக் கொள்ளலாம். இந்த அரங்கத்தின் கீழே, வருவோர் தங்கி ஓய்வெடுக்க அறை வசதிகளும் உள்ளன.

நாளை முதல் அக்டோபர் 14-ஆம் தேதி வரை தமிழ்நாட்டில் உள்ள 375 ஊராட்சிகளில் பள்ளிக் கட்டடம் கட்ட சீரணியால் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய காரியங்கள் வெற்றிபெற, பத்திரிகையாளர்களும் ஒத்துழைக்க வேண்டும்”.

அந்த விழாவில் கலைஞர் அவர்கள் பேசும்போது, “சீரணியினரின் உடல் உழைப்பால் இந்த அரங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான பொருட்செலவுக்காக ராஜஸ்தானியர் சங்கம் 25 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளது. இது அவர்களது அன்புள்ளத்தை மட்டும் காட்டாமல் தமிழர்கள்பால் அவர்கள் வைத்திருக்கின்ற பற்றுதலையும் காட்டுகிறது. அதைவிட, சீரணி தோன்றக் காரணமான அறிஞர் அண்ணா அவர்களின் மீதும், அவர் தம்பிமார்களாகிய நாங்கள் செய்கிற ஆட்சியின் மீதும் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதையும், இவர்களின் நன்கொடை காட்டுகிறது” என்றார்.

...வெற்றிநடை போடும்.

## பொய்ப்பெட்டி

18

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”




## தமிழ்த் தேசியத்தின் பயம் DRAVIDIAN ALGORITHM

***Dravidian Algorithm* என்று சொன்னால், ஆரியக் கொள்கை கொண்ட பா.ஜ.க கதறுவது புரிகிறது. தமிழ்த் தேசியம் என்று சொல்லிக் கொள்ளும் கட்சிக்காரர்கள் குப்புற விழுந்து புரள்கிறார்களே, ஏன்?**

ஆரியத்தின் அடிவருடும் வேலையைப் பல காலமாக இதுபோன்ற ஆட்கள் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஒவ்வொரு காலத்திற்கும் யாரேனும் ஒரு சிலர் வந்து போவார்கள். திராவிடம் என்பது, தமிழர்களின் உரிமைக்கான இயக்கம். ஆரியத்திடம் அடிமையாகாமல் தனது தனித்துவத்தையும் பண்பாட்டையும் பாதுகாக்கின்ற இயக்கம்தான், திராவிடம். தமிழன் கட்டிய கோயில் என்று தமிழ்த் தேசியர்கள் பெருமை கொள்வார்கள். அந்தத் தமிழன் கட்டிய கோவிலின் கருவறையில், தமிழனால் ஏன் தமிழில் அர்ச்சனை செய்ய முடியவில்லை என்ற உரிமைக்காகப் போராடுவது திராவிட இயக்கம்தான். இது போன்ற பல வெற்றிகரமான போராட்டங்களால் ஆரியத்தின் ஆயிரமாயிரம் ஆண்டு கால கொடுங்கரங்களில் இருந்து, தமிழர்களை மீட்டது திராவிட இயக்கம்.

**தமிழ்த் தேசியம் என்ற பெயரில், அரசியல் செய்பவர்களுக்கு தமிழ் மீதும் அக்கறை கிடையாது. தமிழர்களின் வளர்ச்சிக்கான கொள்கையும் திட்டங்களும்கூட கிடையாது.**

இன்று தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் பட்டதாரிகள் உருவாகி, டாக்டர்களாக, இன்ஜினீயர்களாக இருக்கிறார்கள் என்றால், அதற்கு காரணம் திராவிட இயக்கம், அதன் சமூகநீதிக் கொள்கை என்பது, திராவிடம் என்கின்ற நிலப்பரப்பைத் தாண்டி, ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே தெரியும். ஆனால், கிணற்றுத் தவளைகள் போல் தமிழ்த் தேசியம் என்ற பெயரில் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள், ஆரியத்திற்கு தோதாக திராவிடத்தை மட்டுமே எதிர்ப்பார்கள்.

நீட் தேர்வை எதிர்த்து முதலில் போராடியது, திராவிட இயக்கம். இப்போது அது இந்தியா முழுவதும் பரவி இருக்கிறது. இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, முதலில் போராடியது திராவிட இயக்கம். இப்போது இந்தியாவின் பல மாநிலங்களிலும் அந்தக் குரல் ஒலிக்கிறது. எதையும் தொலைநோக்குடன் பல ஆண்டுகளுக்கு முன்பே சிந்தித்து, அதற்கேற்ற வழிவகைகளில் போராட்டங்களை முன்னெடுத்து, சட்டரீதியான தீர்வைக் கண்டது திராவிட இயக்கம். அதைத்தான் *Dravidian Algorithm* என்று தி.மு.க இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சட்டமன்றத்தில் எடுத்துரைத்தார்.


தமிழ்த் தேசியம் என்ற பெயரில், அரசியல் செய்பவர்களுக்கு தமிழ் மீதும் அக்கறை கிடையாது. தமிழர்களின் வளர்ச்சிக்கான கொள்கையும் திட்டங்களும்கூட கிடையாது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் சாதி ரீதியிலான டி.என்.ஏ டெஸ்ட் மட்டும்தான். அதைத்தான் ‘வர்ணாசிரமம்’ என்ற பெயரில் ஆரியமும் செய்து கொண்டிருக்கிறது. இப்பொழுது புரிகிறதா, *DRAVIDIAN ALGORITHM* என்றால், ஆரிய இந்துத்துவா சக்திகள் போலவே, தமிழ்த் தேசியம் என்று லேபிள் ஒட்டிக் கொண்டிருக்கும் கட்சிகளும் எதிர்ப்பதற்கான காரணம்!

...வினா தொடரும்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

529

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131